**செய்தி வெளியீடு எண். 2/2021** **நாள் 03.02.2021**

சென்னை குடிநீர் வாரியம், புழல் **300** MLD சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள உயர்மின் அழுத்த நீர் உந்து நிலையத்தில் இருந்து மத்திய சென்னை மற்றும் தெற்கு சென்னைக்கு குடிநீர் எடுத்து செல்லும் **1200** மில்லி மீட்டர் விட்டமுள்ள குழாய் பழுதுபார்க்கும் பணி 06.02.2021 காலை **09.00** மணி முதல் 07.02.2021 காலை **03.00** மணி வரை நடைபெற உள்ளது.

மேற்கூறிய பணி நடைபெறும் நேரத்தில் மத்திய சென்னை மற்றும் தெற்கு சென்னை பிரதான குழாயின் மூலம் குடிநீர் வழங்கல் பணி தடைபட வாய்ப்புள்ளது. எனவே, கொளத்தூர், அண்ணாநகர், வள்ளுவர் கோட்டம், சதர்ன் ஹெட் ஒர்க்ஸ், அம்பத்தூர் , மண்ணுர்பேட்டை, திருமுல்லைவாயல் மற்றும் ஆவடி ஆகிய பகுதிகளுக்கு சற்று குறைவான அளவு குடிநீர் விநியோகமாகும்.

எனவே, பொது மக்கள் முன் கூட்டியே குடிநீரை சேகரித்து வைத்துக் கொள்ளுமாறும், அல்லது தேவைக்கு லாரி மூலம் குடிநீர் பெற கீழ்கண்ட கைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு குடிநீர் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பகுதி பொறியாளர் –3 – **8144930903**
பகுதி பொறியாளர் –6 – **8144930906**
பகுதி பொறியாளர் –7 – **8144930907**
பகுதி பொறியாளர் –8 – **8144930908**
பகுதி பொறியாளர் –9 – **8144930909**
பகுதி பொறியாளர் –10 – **8144930910**
தலைமை அலுவலகம் – **45674567** (புகார் பிரிவு )

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்